# திருக்குறளும் இஸ்லாமும் கூறும் இல்லறவியல் கருத்துக்கள் : ஓர் ஒப்பியல் நோக்கு

**பௌவுஸ்தீன் பமீஸ்[1], முருகையா சதீஸ்[2]**

[1]சமூகவியல் துறை, [2]தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
fawsfamees1@gmail.com, satheesmurukaiya@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மானிட வாழ்விற்குரிய நல்லறங்களைப் போதிப்பதில் இலக்கியங்களும், மதங்களும் பிரதான இடத்தை வகிக்கின்றன. உலகப் பொதுமறையாய் விளங்கும் திருக்குறளும; முஸ்லிம்களினால் பின்பற்றப்படும் இஸ்லாமிய மார்க்கமும் இவற்றுள் உள்ளடங்குகின்றன. திருக்குறளின் அறத்துப்பாலில் உள்ளடங்கியுள்ள இல்லறவியல் பகுதியில் கூறப்பட்ட நல்லறங்களை இஸ்லாத்துடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதை இவ் ஆய்வு நோக்காகக் கொண்டுள்ளது. திருக்குறளின் இல்லறவியல் பகுதி இல்வாழ்க்கை, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல், செய்ந்நன்றி அறிதல் என்பவை உள்ளடங்கலாக இருபது அதிகாரங்களில் அன்றாட மனித வாழ்விற்குரிய நீதிக்கருத்துக்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து இஸ்லாமிய நோக்கு நிலையில் இறைவேதமாகிய குர்ஆனும், இறைத்தூதரின் வாழ்வியல் வடிவமாகிய ஹதிஸூம் எவ்வாறு வலியுறுத்துகின்றன என்பதனை அறிய விபரணப்பகுப்பாய்வு முறை, ஒப்பியல் முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலக்கியமான திருக்குறளும், மார்க்கமாகிய இஸ்லாமும் இல்வாழ்விற்குரிய நல்லறங்களைப் போதிப்பதுடன் உலக சமாதானத்திற்கும் வழிவகை செய்கின்றது. முதலாம் நிலைத் தரவுகளான திருக்குறள், அல்குர்ஆன், ஹதீஸ் நூல்கள் போன்றவற்றுடன் இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், இணையம் போன்றவையும் இவ்வாய்வின் மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** திருக்குறள், இல்லறவியல், இஸ்லாமியக்கருத்துக்கள், ஒப்பியல் நோக்கு.

## ஆய்வு அறிமுகம்

திருக்குறள் வள்ளுவரால் படைக்கப்பட்டது. இது உலகம் திறமுறத் தேர்ந்து தெளிய மொழியப்பட்ட பொய்யாமொழி, ஆதலால் உலக நூல்களில் தலை சிறந்தது. மொழி, குலம், மதம், காலம் எல்லாவற்றிற்கும் பொதுவாய் உலகமக்கள் யாவருக்கும் வாழ்வியலுக்கு வழிகாட்டியாய்த் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் மங்காமல் என்றும் புதுமையாக ஒளிர்கிறது. முப்பால் எனப் பெயர்பெறும்படியாக அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற அமைப்பில் அமைந்து, அறத்துப்பாலின் இல்லறவியல் எனும் இயலில் இருபது அதிகாரங்களில் இல்வாழ்விற்குரிய நல்லறங்களை வள்ளுவர் போதிக்கிறார். களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் நிகழ்ந்த சூழலில், சீரழிந்து கிடந்த தமிழகத்து மக்களை நன்நெறிப்படுத்த திருக்குறள் தோன்றியதுடன் அறியாமையில் மூழ்கிச் சீரழிந்த அராபியச் சூழலை மேன்நிலைப்படுத்தவும் கி.பி ஏழாம் நூற்றாண்டளவில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதித் தூதராக அகிலத்துக்கு அனுப்பப்பட்டார்கள். இவ்விருவரது சமூகச் சூழலும் ஒன்றாக இருந்ததுடன் சமூக நல்வழிப்படுத்தல்களுக்காக இருவரும் தம்மை அர்ப்பணித்தனர். எனவே திருக்குறளும், இஸ்லாமும் மனித வாழ்வை நன்னெறிப்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளன. இவ்வகையில் வள்ளுவர் கூறும் அறத்துப்பாலின் இல்லறவியல் கருத்துக்களை இஸ்லாமிய நோக்கு நிலையில் ஒப்பியல் அணுகுமுறையூடாக இவ்வாய்வு மிகச் சுருக்கமாக ஆராய்கிறது.

## ஆய்வு நோக்கம் :

திருக்குறளின் அறத்துப்பாலில் உள்ளடங்கிய இல்லறவியல்ப் பகுதி கூறுகின்ற நல்லறங்களை இஸ்லாத்துடன் ஒப்பியல் அணுகுமுறை ஊடாக ஆராய்வதை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

ஆய்வானது பண்பு சார் முறைமையைக் கொண்டமைந்து, விபரணப்பகுப்பாய்வு முறை, ஒப்பியல் முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத் தரவுகளான திருக்குறள், அல்குர்ஆன், ஹதீஸ் நூல்கள் போன்றவற்றுடன் இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், இணையம் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அன்புடைமை**

இல்லறவியல் போற்றும் உயர்ந்த பண்புகளில் அன்புடைமையும் ஒன்றாகும். இதனை வள்ளுவர் சுட்டிக்காட்டும் போது, அன்புக்கு அடைக்கும் தாழ்ப்பாள் இல்லை. அ∴து அன்புடையவர்களுக்கு நட்பை உண்டாக்கும். அதனை அவர்களின் இன்பக் கண்ணீரே வெளிப்படுத்திக் காட்டும். அன்புள்ளவர்கள் தமக்கே அன்றி எல்லோருக்கும் உரித்துடையவர்கள் என்கிறார் வள்ளுவர். இதனை,

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன் கண்நீர் பூசல் தரும்'' (குறள் - 71)
''அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'' (குறள் - 72) போன்ற குறளடிகள் விளக்குகின்றன. இஸ்லாமிய நோக்கிலே ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமை சந்திக்கும் போது (ஸலாத்தினை) அவர் மீது சாந்தியும், அன்பும் உண்டாகட்டும் எனப் பிரார்த்திப்பது அன்பின் வெளிப்பாட்டைச் சுட்டுகின்றது.
மேலும், இறைவன் மன்னிப்பவனாகவும், மிக்க அன்புடையவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன்: 85:14) என்ற கூற்றும் சிறப்புக்குரியது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் போர்க்கைதிகள், தன்னைக் கொல்ல வந்தவர்கள், ஏழைகள், அந்நியமதம் சார்ந்தவர்கள் என அனைவர் மீதும் அன்பு காட்டி இருக்கிறார்கள். இவை இஸ்லாத்தின் அன்புடைமையை வெளிப்படுத்துவதுடன், ''இறைவனின் அனைத்துப் படைப்பினங்களிடமும் அன்பு காட்டாதவர் இறைவனால் அன்பு காட்டப்படமாட்டார்'' (புகாரி) என்ற நபி மொழியானது அன்புடைமையின் முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது. எனவே அன்புடமையே உலகத்தில் உயர்ந்தது என்பதை திருக்குறளும், இஸ்லாமும் வலியுறுத்துகின்றன.

**விருந்தோம்பல்**

இல்லறத்தானுக்குரிய சிறந்த கடமைகளில் விருந்தோம்பலும் உன்னதமானது. வீட்டில் இருந்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பாதுகாத்து உதவிசெய்வதற்கேயாம். அவர்களை இன்முகங்கொண்டு வரவேற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.
இதனை,
''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு'' (குறள் - 81) என்ற குறட்பா புலப்படுத்துகின்றது. மேலும் விருந்தினரைப் பேணி வருவோனுக்கு எந்தத் துன்பமும் அணுகாது என்றும், வந்த விருந்தினரை உபசரித்து, உணவூட்டி, இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்போன் தேவர்கட்குச் சிறந்த விருந்தாக இருப்பான் என்கிறார். இக்கருத்தினை,
''செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு'' (குறள் - 86) என்ற குறட்பா மூலம் வள்ளுவப் பெருந்தகை சுட்டுகின்றார். எனவே விருந்தினரைப் உபசரிப்பதே உயர்ந்த அறமாகும் என்கிறார்.
இக்கருத்துக்களை ஒட்டியதாக ''யார் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்புகிறாரோ, அவர் தனது விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். (புகாரி, முஸ்லிம்)
அத்துடன், ''யார் விருந்தழைப்பை ஏற்க மறுக்கிறாரோ, அவர் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் மாறு செய்து விட்டார்'' எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். (புகாரி, முஸ்லிம்)
இவை விருந்தினரை உபசரிக்காதவரிடம் இறை நம்பிக்கையும், மறுமை நம்பிக்கையும் இருக்க முடியாது என்றும், விருந்தழைப்பை மறுப்பவர்கள் அல்லாஹ்விற்கும், தூதருக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்க முடியாது என்றும் தெளிவுபடுத்துகின்றன. எனவே இவ்விரண்டு வாழ்வியல் நெறிகாட்டிகளும் விருந்தோம்பலை உயர் அறமாக அடையாளப்படுத்துகின்றமை போற்றுதற்குரியது.

**இனியவை கூறல்**
இனியவை கூறல் என்பது மனதிலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்ற இனிய சொற்களைச் சொல்லுதலாகும். இன்சொல் அன்பு கலந்தது. வஞ்சம் அற்றது.மெய்ப்பொருளை அறிந்தார் வாயிலிருந்து அது பிறக்கிறது. அது முகம் மலர்ந்து இன்பத்தோடு பார்த்து உள்ளத்தில் நின்றும் பொங்கி வெளிப்படுத்துவது. அ∴தே இன்சொல் அறமும் ஆகும். நற்குணத்தின் வேறாகாத இன்சொல் பேசுவோனுக்கும் - மற்றையோருக்கும் நன்மை பயப்பதாகும் என்கிறார் வள்ளுவர். இவற்றினை,

"இன்சொலால் ஈரம் அளை இப்படிறிலவாம்
செம் பொருள் கண்டார் வாய்ச்சொல்" (குறள் - 91)
"அகன் அமர்ந்தீதலின் நன்றே முகன் அமர்ந்
தின் சொலன் ஆகப்பெறின்" (குறள் - 92) போன்ற குறளடிகள் சுட்டி நிற்கின்றன.

மேலும் ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதைப் பாக்கினும் இன்சொல் பேசுவது உயர்ந்தது. இன்சொல் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும் என்கிறார் வள்ளுவர்.இதனை,
"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந்தரும்" (குறள் - 98) என்ற குறட்பா தெளிவுபடுத்துகின்றது.
இஸ்லாமிய நோக்கிலே, "யார் அல்லாஹ்வையும் மறுநாளையும் நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் இல்லாவிட்டால் மௌனமாக இருக்கட்டும்" (புகாரி,முஸ்லிம்)என்ற இறைத்தூதரின் வாக்கானது இனியவை கூறலை வெளிப்படுத்துகின்றது.
அத்துடன் "அவனிடம் நீங்கள் மென்மையாகிப் பேசுங்கள்; அவன் அறிவுரையை ஏற்க்கக் கூடும் அல்லது அஞ்சக் கூடும் (அல்குர்ஆன்: 20:44) என்று அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது. ஆதலால் திருக்குறளும், இஸ்லாமும் இன்சொல் பேச வேண்டும் என்கிறது.

**செய்ந்நன்றி அறிதல்**
இ∴து நன்றியுடைமையைக் குறிக்கின்றது. பிறருக்கு ஒருவர் செய்யும் உதவி சாலச்சிறந்ததாகும். அவ்வாறு ஒருவர் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் அது ஈடாகாது என்கிறார் வள்ளுவர்.
இதனையே, "செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றல் அரிது" (குறள்-101) என்ற குறள் விளக்குகின்றது.
மேலும், தக்க தருணத்தில் செய்த உதவி உலகைவிடப் பெரியது. அதன் உயர்வை நன்கு அறிந்தோர் அது தினையளவு சிறிதாய் இருப்பினும் பனையளவு பெரிதாக மதித்து நடப்பர். எனவே உதவி செய்தவரின் நட்பை மறக்கக் கூடாது என்கிறார்.
இதனை, "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்" (குறள் -107) என்ற குறட்பா சுட்டுகின்றது.
இக்கருத்துக்களைத் தழுவியதாக இஸ்லாத்தில், "யார் மனிதர்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் இறைவனுக்கு நன்றி செலுத்தாதவர் ஆவார். ஒரு மனிதனுக்குப் பிறமனிதர்கள் மீதுள்ள கடமைகளில் முக்கியமானது,தமக்கு நன்மைசெய்தவருக்கு நன்றி தெரிவிப்பதாகும்" என்ற நபி மொழியும் அத்துடன் முன் பின் பாவம் மன்னிக்கப்பட்ட நபி (ஸல்)தன் கால் பாதம் வீங்கும் அளவிற்கு நின்று வணங்கினார்கள். இதுபற்றி அவரிடம் வினாவிய போது நான் நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா? என்று பதில் அளித்தார். (புகாரி) இவை செய்ந்நன்றியறிதலின் மகத்துவத்தினைப் புலப்படுத்துகின்றன.

**நடுவு நிலைமை**
நடுவு நிலைமை என்பது பகைவர், நண்பர், ஆகஅ்யலோர் ஆகியோரிடத்தும் தர்மத்தினின்றும் தவறாமல் ஒப்ப நிற்கும் நிலைமை ஆகும். அதைக் கடைபிடித்து நடந்து வந்தால் அது நன்மை பயக்கும் என்கிறார் வள்ளுவர்.
நடுவு நிலைமையால் வந்த செல்வம் நன்மையைத் தரும். மற்றைய செல்வம் தீமையைத் தரும் என்கிறார். நடுவுநிலைமையுடையவனது செல்வம் பிறருடைய செல்வம் போல் அழியாமல் அவனின் புத்திரர்க்கும் இன்பம் தரும் உறுதியுடையதாகும் என்கிறார்.
இதனை,
"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து" (குறள் - 112) என்ற குறட்பா புலப்படுத்தி நிற்கிறது.

இஸ்லாமிய மார்க்கம் நடுவுநிலைமையைச் சமூக, பொருளாதார, ஆன்மீக மற்றும் வாழ்வியலின் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடைப்பிடித்து ஒழுகுமாறு வலியுறுத்துகின்றது. இறைமறையிலே ''உங்களை நடுவுநிலையான சமூகமாக ஆக்கியுள்ளோம் ஏனெனில் ஏனைய மனிதர்களுக்கு சாட்சியாளராக இருப்பதற்காகவே ஆகும்'' என இறைவன் குர்ஆனிலே குறிப்பிடுகின்றான்.
(அல்குர்ஆன் : 2:143) மேலும், ''நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால் நீதியுடன் தீர்ப்பு வழங்குங்கள்'' எனவும் (அல்குர்ஆன் : 4:58) ''இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்'' (அல்குர்ஆன் : 5:8) போன்ற வசனங்களானவை நடுவுநிலைமையைக் கடைப்பிடித்து ஒழுகுவதை முக்கியத்துவப்படுத்துகின்றன. ஆதலால் நடுவு நிலைமையே ஒருவன் வாழ்க்கைக்கு உயர்ந்தது என்பதாம்.

**ஒழுக்கமுடைமை**

ஒழுக்கமே எல்லோருக்கும் சிறந்த உயர்வைத் தருவதாகும். அதனால் அதை உயிரினும் சிறந்ததாகப் பாதுகாக்க வேண்டும் எனவும் மேலும் ஒருவன் நல்லொழுக்கத்தினால் மேன்மையும், தீய ஒழுக்கத்தினால் பழியையுமே அடைகின்றான். இதனை,

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'' (குறள் - 131)

''ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி'' (குறள் - 137) போன்ற குறள்கள் தெளிவுபடுத்துகின்றன. இஸ்லாமிய வேதமான அல்குர்ஆன் நற்குணத்தைப் பூரணப்படுத்துவதற்காகவும் (ஸூரா கலம்: 2) முழு சமூகத்திற்கும் முன்மாதிரியாகவும் (அஹ்ஜாப்: 21) இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார் எனக் கூறுகின்றது.
ஆகவே மனித சமூகத்திற்கான ஒழுக்கவியல் கூறுகளைக் கொண்ட குர்ஆனில் ''முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம்'' என்ற வசனமானது மேலும் பல சமூகத்திற்குத் தேவையான ஒழுக்கவியல் கூறுகளை எடுத்தியம்புகின்றது.
ஆகவே ஒழுக்கம் எல்லாவற்றிலும் சிறந்த அறமாகும் என்பதையே வள்ளுவரின் இல்லறவியலும், இஸ்லாமும் வலியுறுத்துகின்றன.

**பொறையுடைமை**

பொறையுடைமை என்பது ஒருவன் தம்மிடம் தீங்கு செய்தவிடத்தும் தாமும் அத்தீங்கை அவனுக்குச் செய்யாமல் பொறுத்தலுடையராய் இருத்தலாகும். தன்னை வெட்டித் தோண்டுவோரையும் தாங்கிச்சுமப்பது நிலம். அதுபோல தம்மைப் பழிப்போரின் குற்றத்தைப் பொறுத்துக் கொள்வதே உயர்ந்தது என்கிறார் வள்ளுவர். மேலும் வலிமையிற் சிறந்த வலிமை அறியார் செய்யும் தீங்கைப் பொறுப்பதாகும். தீமை செய்தவரை உயர்ந்தோர் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார். தீமையை பொறுத்துக் கொள்வோரைப் பொன்னினும் உயர்வாக மதிப்பர் என்று கூறுகிறார் வள்ளுவர். இதனையே,

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை'' (குறள் - 151)
ஒறுத்தார்க் ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்னும் துணையும் புகழ்'' (குறள் - 156) போன்ற குறட்பாக்கள் சுட்டுகின்றன.

இஸ்லாத்திலே, ''ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், செல்வங்கள், உயிர்கள் மற்றும் பலன்களையும் சேதப்படுத்தியும் உங்களைக் சோதிப்போம்; பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக!'' (அல்குர்ஆன்: 2:155) என்ற வசனமானது துன்பத்திலும் பொறுமையை காப்பது உயர்வெனப் பேசுகிறது.
மேலும் '' அல்லாஹ் பொறுமையாளர்களுடனேயே இருக்கின்றான்'' (அல்குர்ஆன்) என்பதும் முக்கியமானது..
அத்துடன் ''ஒருவருக்கு பிரியத்திற்கு உரிய இரு பொருட்களைப்பறித்துக் கொண்டு சோதித்து அவர் பொறுமையை காப்பாரேயானால் அவற்றுக்குப் பதிலாக சுவனத்தை வழங்குவேன்'' (ஹதீஸுல் குத்ஸி) என அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள். இது இரு கண்கள் பறிக்கப்பட்ட நிலையிலும் பொறுமை காப்பதன் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது. ஆதலால் பொறுமையை எக்காலத்தும் கைக்கொள்ள வேண்டும் என்பதாம்.

**வெஃகாமை**

இ..து பிறர் பொருளை எடுத்துக் கொள்ள நினையாதிருத்தலைச் சுட்டுகின்றது. மனச்சான்றை மறைத்துப் பிறர் பொருளைக் கொள்ள ஆசைப்படுதல் கூடாது. அப்படிக்கொண்டால் அவன் குடி கெடும். அத்துடன் குற்றமும் தொடர்ந்து வரும் என்கிறார் வள்ளுவர். இதனை,

''நடுவின்றி நன் பொருள் வெ..கின் குடி பொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்'' (குறள் - 171) எனும் குறட்பா தெளிவுபடுத்துகின்றது.

திருக்குறள் பிறர்பொருளை தனதாக்க மனதளவிலும் எண்ணக்கூடாது எனக்கூற, இஸ்லாம் கடுமையான தண்டனையினூடாக வெ..காமையை வலியுறுத்துகின்றது. ''அல்லாஹ்வின் தண்டனையாக அவ்விருவரது கைகளையும் துண்டித்து விடுங்கள்'' (அல்குர்ஆன் : 5:38) மேலும் இறைத்தூதர் ''தனது மகள் பாத்திமா திருடினாலும் கையைத் துண்டிப்பேன்'' (முஸ்லிம்) எனக் குறிப்பிட்டுள்ளமையும் இதனைச் சான்று பகிர்கிறது. அவற்றினூடாக பிறர் பொருளை வெ..காமல் இருத்தலே நல்லறமாகும் எனும் விடயம் திருக்குறளிலும், இஸ்லாத்திலும் உயர்வு படுத்தப்பட்டுள்ளது.

**புறங்கூறாமை**

இ..து பிறர் காணாத இடத்தே பிறரை இகழ்ந்து பேசாதிருத்தலாகும். ஒருவன் வாயாற் கூட அறத்தைச் சொல்லாதவனாயினும் அவன் பிறனொருவனைப் பற்றி குற்றம் குறை கூறாதவன் ஆயின் அதுவே இனியது ஆகும். இதனையே வள்ளுவர்,

''அறன்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றால் இனிது'' (குறள் - 181) என்கிறார்.

மேலும் ''புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்'' (குறள் - 183) எனும் குறட்பா மூலம் ஒருவர் புறங்கூறித்திரிந்து பயனில்லாத வாழ்க்கை வாழ்வதை விட சாவது மேல் எனக் கூறுகிறார்.

இதேபோன்று ''குறை கூறிப் புறம் பேசித் திரிபவர்களுக்குக் கேடுதான்'' என (அல்குர்ஆன் : 104:1) எனக் குர்ஆன் குறிப்பிடுவதுடன் இஸ்லாம் மறுமையின் சிறந்த பரிசான சுவனம் நுழைவதையும் தடைசெய்கின்றது.

இதனை, ''கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழையமாட்டான்'' (புகாரி, முஸ்லிம்) என்ற நபிமொழி சுட்டிநிற்கிறது. ஆகவே புறங்கூறாமை உயர் அறம் என்று திருக்குறளும், இஸ்லாமும் சித்திரிக்கின்றன.

**தீவினையச்சம்**

தீவினையச்சம் என்பது பாவங்களாய் உள்ளவற்றைச் செய்வதற்குப் பயப்படுவதாகும். நல்லோர் தீவினைக்கு அஞ்சுவர். தீயோர் தீவினைக்கு அஞ்சமாட்டார். தீயசெயல் கெடுதலைத் தருவதால் அதை நெருப்பினும் கொடியதாக நினைத்து அஞ்ச வேண்டும் என்கிறார் வள்ளுவர். இக்கருத்தினை,

''தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு'' (குறள் -201) என்ற குறட்பாவில் கூறுகிறார். இஸ்லாமிய மார்க்கத்தில் பாவத்திலே இருந்து விலகி இருத்தல் ''தௌபா'' என்ற செயன்முறையைக் கொண்டிருப்பதுடன் பாவத்திற்கு வருந்தி, பாவமீட்சி பெற்று, மீளவும் பாவம் செய்யமாட்டேன் என உறுதி பூணுவதைக் குறித்து நிற்கிறது.

மேலும் ''பாவமில்லாதபோது தேர்ந்தெடுப்பவர்களாகவும், பாவமாக இருந்தால் தூர விலகியிருப்பவர்களாகவும் இருந்தார்கள்'' (புகாரி) என்ற இறைத்தூதரின் இரண்டு நிலைப்பாடுகளும் முக்கியமானவை.

அத்துடன் ''பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டைத் தர்மம் செய்தேனும் நரகத்தில் இருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்'' (புகாரி) என்ற இறைத்தூதரின் வாக்கானது நன்மையை வலியுறுத்தி பாவத்தில் இருந்து விலகுவதை வலியுறுத்துகின்றது. ஆதலால் தீவினைக்கு அஞ்சுதல் உயர் அறம் என்பதே வள்ளுவரதும், இஸ்லாத்தினதும் கருத்தாகும்.

**ஈகை**

இ..து யாசகம் வேண்டுவோருக்கு இல்லை என்று சொல்லாமல் இயன்றமட்டும் கொடுத்தலாகும். வள்ளுவர் ஈகை என்பது ஏழைகட்கு வேண்டிய ஒன்றைக் கொடுத்தல் என்றும், ஏனையோருக்கு கொடுப்பது ஈகையாகாது என்கிறார். மேலும் ஒன்றைப் பிறரிடம்

வாங்குவது அறமென்று உலகத்தார் சொன்னாலும் அப்படி வாங்கிக் கொள்வது நன்றல்ல. ஒருவருக்கு ஒன்றைக் கொடுப்பதே நல்லது என்கிறார்.
இதனை,
"வறியார்க் கொன் றீவதே ஈகை, மற்றெல்லாம்
குறி எதிர்ப்பை நீர துடைத்து" (குறள்-221)
"நல்லா றெனினும் கொளல் தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (குறள்-222) போன்ற குறட்பாக்கள் உறுதிசெய்கின்றன.
இஸ்லாம் ஸகாத், ஸதகா போன்ற வழிகளினூடாக கொடையை ஊக்குவிக்கின்றது. "எந்தப்பொருளை நீங்கள் செலவு செய்த போதும் அதற்குப் பகரமாக அவன் அளிக்கின்றான்" (அல்குர்ஆன்: 34:39) என்ற இறைமறையும் "அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் செலவிட்டால் நற்கூலியைப் பெறுவீர்; மனைவியின் வாயில் ஊட்டிவிடும் ஒரு கவள உணவிற்காகவும் நன்மை அளிக்கப்படும்" (புகாரி,முஸ்லிம்) என்ற நபி மொழியும் ஈகையின் சிறப்பினை வெளிக்கொணர்கிறது. ஆதலால் ஈவதே சிறந்த அறமெனப்படும் என்பதையே திருக்குறளும், இஸ்லாமும் சுட்டி நிற்கின்றன.

**முடிவுரை**

மனித சமுதாயத்தினை நல்வழியின் பக்கம் நெறிப்படுத்தும் பொருட்டு காலத்திற்குக் காலம் செயற்பட்ட தனிமனிதர்களது அர்ப்பணிப்புக்கள் விலை மதிக்கமுடியாதவையாகும். அவ் வரிசையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களும், திருவள்ளுவரும் மிக முக்கியமானவர்கள். களப்பிரர் ஆட்சி வலுப்பெற்ற காலத்தில் மக்களின் சீரிழிந்த வாழ்வுப்போக்கைச் சீர்திருத்தும் இலக்காகத் தோன்றிய திருக்குறளின் - இல்லறவியல் பகுதி நற்கருத்துக்கள் பொதிந்ததாக விளங்குகின்றது. இந்த நோக்கு நிலையில் இவ் இல்லறவியல் கருத்துக்கள் இஸ்லாத்திலும் மிகுதியாகப் பொதிந்துள்ளது. முடிவாகத் திருக்குறளும், இஸ்லாமும் நன்நெறி வாழ்விற்கு என்றும் வழிகாட்டுபவை என்பதை மையப்படுத்தி சமாதானமிகு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஒப்பியல் அணுகுமுறையில் இவ்வாய்வு ஆராயப்பட்டுள்ளது. எனவே இலக்கியங்களிலும், சமயங்களிலும் பொதிந்துள்ள உயர் நீதிக் கருத்துக்கள் ஆய்வாளர்களினால் ஆராயப்பட்டு இது சார்ந்த மேலும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

**உசாத்துணைகள்**


- இராமசாமி.செ.ரெ, (1951), திருக்குறள் பொருள் விளக்கம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- தரு.வி.க, (1950), திருக்குறள்மூலம் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன், பொதிகை பதிப்பகம், கடலூர்.
- பாலசுப்பிரமணியம், (2014), குறளின் கண்கள், ஆய்வுக்கோவை இலக்கியம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி.
- அப்துர்ரஹ்மான்.மு, (1998), இஸ்லாம் தந்த மனிதஉரிமைகள், இஸ்லாமிய அலுவல்கள், வக்பு அழைப்பு வழிகாட்டலுக்கான அமைச்சு, சவுதி அரேபியா.
- பாவாஸ்.இஸட்.ஏ.எம், (2014), அல்லாஹ்விற்கு அருட்கொடைகளும் அடியார்களின் நன்றியுணர்வும், அல்ஹஸனாத் மாதஇதழ் , அல்ஹஸனாத் பதிப்பகம், கொழும்பு 09.
- நிஹால்.எம்.தா, (2015), நீதிக்குச் சான்று பகர்பவர்களாகத் திகழுங்கள், அல்ஹஸனாத் மாதஇதழ், அல்ஹஸனாத் பதிப்பகம் , கொழும்பு 09.
- யூஸீப்.க (2012), இஸ்லாமிய அரசியல் , அல்ஹஸனாத் பதிப்பகம் , கொழும்பு 09.
- http://namadhurseythigal.blogspot.com/2017/09/blog-post_93.html
- http://www.tamililquran.comhttp://www.ismailsalafi.com/% /
- http://www.bayanapp.indiabeeps.com
- https://sufimanzil.org
- https://sufimanzil.org
- http://namadhurseythigal.blogspot.com/2017/09/blog-post_93.html
- http://www.tamililquran.comhttp://www.ismailsalafi.com/%
- http://www.bayanapp.indiabeeps.com